சென்னை 26-10-2009

தினத்தந்தி

பூந்தமல்லி

# விழிப்புணர்வு பேரணி




பூந்தமல்லி, அக்.26–

மனிதர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றால் கரியமில வாயுவின் அடர்த்தி அதிகரித்து பூமி வெப்பமடைகிறது. இதனால் இயற்கை சீற்றங்கள் நிகழ வாய்ப்புகள்ளது. எனவே இயற்கை சீற்றத்தை தடுக்க வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மேக்ட் குழந்தைகள் கூட்டமைப்பு சார்பில் மரம் வளர்ப்பதன் அவசியம் மற்றும் இயற்கை சூழலை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை பூந்தமல்லி பஸ் நிலையம் அருகே நடத்தினர். இதில் பள்ளி குழந்தைகள் தங்களது உடலில் வேப்பிலையை கட்டி கொண்டு மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து பிரசாரம் செய்தனர்.

பிசாரத்தில் மாநில ஒருங்கிணைப்பாளர் சாரா, ஒருங்கிணைப்பாளர் இந்திரா, வின்சென்ட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.